தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 014/ந/2023
நாள் 23.02.2023

திரு.V.பழனிவேலு,
மயிலாடுதுறை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி. – எதிர் மனுதாரர்

மயிலாடுதுறை, கோரநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.பழனிவேலு என்பவரின் 02.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.01.2023 அன்று பெறப்பட்டு 014/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மயிலாடுதுறை, கோரநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.பழனிவேலு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

" I submit that I am a resident of Koranad within Mayiladuthurai Municipal limit and I am a senior citizen paying property tax and other taxes and I am entitled to ensure that the Municipal tax revenue is being utilized properly. I am also a social worker holding the post of President of Tamil Nadu All Department Pensioners Association of Mayiladuthurai District. Hence I have got fundamental right to ensure that the Municipal Tax revenue is not misused by any local body officials. It was brought to notice that the Municipal Commissioner and his subordinates failed to comply with the directions of the Hon'ble National Green Tribunal in the matter of protecting environment and consequently the National Green Tribunal imposed Environmental Compensation of Rs.9,00,000/- (Rupees Nine Lakh ) payable by the Municipality vide their order dated 23.12.2019. It is further submitted that the Municipal Commissioner, Mayiladuthurai has failed to pay the Environmental Compensation till March 2022 which is utter disobedience of the Hon'ble Green Tribunal. The Chief Environmental Engineer has filed Report before the Hon'ble

National Green Tribunal (Southern Zone) point out that the Municipal Commissioner has not paid the compensation vide report dated 07.11.2021. It is submitted that the Municipal Commissioner has failed to comply with the directions of the Hon'ble Green Tribunal and he is solely responsible for the lapses. But all of a sudden, the Municipal Commissioner has paid a sum of Rs.9,00,000/- (Rupees Nine Lakh) from the Municipal Tax Revenue vide Resolution No.68 dated 27.05.2022. (vide O.A.No.92 of 2017 and O.A.No.23 of 2018 filed by S.Vijayakumar of Mayiladuthurai) It is submitted that the above matter has not at all been reported to the Commissioner of Municipal Administration or the Government of Tamil Nadu and no prior permission was accorded for such payment of environmental compensation from Municipal Tax Revenue. It is further submitted that as per the Sec.15 etc., of Tamil Nadu District Municipalities, the Commissioner or Chairman has no independent powers to make prior payment subject approval by the Municipal Council. As per the Note under the above resolution that subject council approval the amount has already been paid. In fact the amount has been paid on 12.04.2022 as per the further report filed by the Chief Environmental Engineer on 16.05.2022 before the Hon'ble Green Tribunal (Southern Zone).

Thus the Municipal Commissioner has committed the following:-

1) Failed to discharge his duties and failed to comply with the directions of the Hon'ble National Green Tribunal order dated 23.12.2019.

2) Misused his official powers by paying Rs.9,00,000/- (Nine lakh) towards Environmental Compensation from the Municipal Tax Revenue for the contempt of Court orders committed by the Municipal Commissioner by not complying with the specific directions of the National Green Tribunal.

3) Failed to report the matter to the Head of the Department about the above lapses and Environmental Compensation imposed on the Municipal Commissioner, Mayiladuthurai as early as on 23.12.2019 and delay in payment.

4) Misused his official powers paid Rs.9,00,000/- without getting proper orders from the Government and suppressing the facts of non compliance of directions of National Green Tribunal put up incorrect information before the Municipal Council and without getting approval by the council, paid the amount in 12.04.2022 and put up resolution on 24.05.2022.

PRAYER

It is prayed that this Hon'ble Ombudsman may be pleased to order

(I) To recover the amount of Rs.9,00,000/- (Rupees Nine Lakh) from the Municipal Commissioner, Mayiladuthurai who paid the amount by misusing his official power and thereby caused loss of revenue to the Municipality.

(II) To recommend to the State Government / Head of the Department to take severe disciplinary action against the Municipal Commissioner and other officials responsible for the lapse and loss of revenue

and thus render justice.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.01.2023 நாளிட்ட கடிதம் மூலம் மயிலாடுதுறை, நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

" In the Order of the National Green Tribunal, Southern Zone on 02.07.2020 in O.A.No.606/2018 in 4.1 (a) stated that any such continued failure will result in liability of every local body to pay Compensation at the rate of Rs.10 lakh per month per local body for Population of about more than Rs. 10 Lakh, for Population between 5 to 10 Lakh Rs.5.00 Lakh per month per local body, and Rs.1.00 Lakh per Mensem for other local body from 01.04.2020.

If the local body is unable to bear financial burden, the liability will be of the State Government with liberty to take remedial action against the erring local bodies.

In 4.1 (e) it has also stated that the Compensation in above terms may be deposited with Central Pollution Control Board for being spent on restoration of environment which may be ensued by the Chief Secretaries of the State / Union Territories.

This Order was passed on the appearance of Chief Secretaries of all the states before National Green Tribunal dt. 02.07.2020 in O.A.No.606/2018.

The Tamil Nadu Pollution Control Board Chairman had claimed Rs.9.00 Lakh on 23.12.2019 as an environmental Compensation fee from Mayiladuthurai Municipality and the same was reiterated to be paid by District Environmental Engineer, Nagapattinam on 20.02.2020.

As Municipality was not remitting the fees of Tamil Nadu Pollution Control Board, on a timely basis TNPCB pointed out before the NGT on 03.02.2022 while the hearing of O.A.No.92/2017 and O.A.No.23/2018. On that hearing Joint Chief Engineer Tamil Nadu Pollution Control Board also stated that Municipality was taking proper efforts under SWM Rules and there was no pollution at the time of presenting the report before National Green Tribunal.

NGT in its order had questioned TNPCB as to why further steps to recover the Environmental Compensation Fee from ULB. In continuation of this, District Environmental Engineer in his letter no DEE/TNPCB/NPM/NGT dt.23.02.2022 claiming the amount from Municipality again. Then Municipality was remitted an amount of Rs.9.00 Lakh through DD.No.894241579/IOB dt.08.04.2022 to TNPCB.

Here the petitioner claimed why prior permission was not sought by the Commissioner from Government before remitting the fees to TNPCB. The order of NGT on 02.07.2020 was passed in O.A.No.606 of 2018 in that Petition the Secretaries of all the State Government also parties to the proceedings. So they already got knowledge about the NGT Order for that I also enclosed a copy of the NGT Order dt.02.07.2020. Moreover the amount was claimed from ULB. As per G.O (D) 334, M.A. & W.S dt.03.08.2016 Selection Grade Municipalities have powers to spend Rs.48.00 lakh with consent from Council. As per this G.O. only Municipality paid Rs.9.00 Lakh to TNPCB with Chairman's anticipation dt.07.04.2022 and Municipal Council Resolution obtained in this regard vide MCR.No.68/27.05.2022.

For the reasons stated above there was no violation of rules in remitting Rs.9.00 Lakh to TNPCB by this ULB. Moreover this ULB operates STP, Gasifier Crematorium, process of Bio Mining, SWM with Consent of TNPCB. Hence I hereby prays to dismiss to Petitioner's Original Application and thus render justice" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரும் 14.02.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.01.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.V.பழனிவேலு, 14.02.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளில் கழிவு நீர் கலப்பது தொடர்பாக பசுமை தீர்ப்பாயத்தில் மயிலாடுதுறையைச் சேர்ந்த திரு. எஸ். விஜயகுமார் என்பரால் தொடரப்பட்ட வழக்கு எண் OA No.92/2017 (SZ) மற்றும் OA No.23/2018 (SZ) ல் வழங்கப்பட்ட 23.12.2019 நாளிட்ட ஆணையின் அடிப்படையில் தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம் விதித்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.9,00,000–/ ஐ செலுத்த வேண்டுமென தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம் ஆணையிட்டதன்பேரில் மயிலாடுதுறை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கண்ட தொகை தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொகையினை நீர்நிலைகளில் கழிவு நீர் கலப்பதற்குக் காரணமாக இருந்த அலுவலர்களிடமிருந்து வசூல் செய்து தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், மயிலாடுதுறை நகராட்சியால் தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு நகராட்சியின் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இதற்குக் காரணமான அலுவலர்களிடமிருந்து மேற்கண்ட தொகையை வசூல் செய்திடவும் மேற்கண்ட தவறுக்குக் காரணமான அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக மேலும் சில ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் 28.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தலைவரின் 23.12.2019 நாளிட்ட கடிதத்தில், மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளில் கழிவு நீர் கலப்பது தொடர்பாக நாகப்பட்டினம் சுற்றுச் சூழல் பொறியாளரின் அறிக்கையின் அடிப்படையில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இழப்பீட்டு தொகையாக ரூபாய் 9 இலட்சத்தை செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்நேர்வு தொடர்பாக தேசீய பசுமைத் தீர்ப்பாணையத்தின் 17.11.2021 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், மேலும் 3.2.2022 நாளிட்ட ஆணையின் அடிப்படையிலும் ( O.A. No. 92/2017 and O.A. No. 23/2018) மேற்கண்ட இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 9 இலட்சத்தை மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துமாறு மீண்டும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் தனது 23.3.2022 நாளிட்ட கடிதத்தில் மயிலாடுதுறை நகராட்சியை கேட்டுக்கொண்டது. இதன் அடிப்படையில், நகராட்சியின் தீர்மான எண் 67, நாள் 27.5.2022ன்படி மேற்கண்ட தொகை நகராட்சியின் பொது நிதியிலிருந்து 8.4.2022 அன்று மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தொகையை செலுத்தும்போது நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து ஒப்புதல் / பின்னேற்பு நகராட்சியால் பெறப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக எனது 14.2.2023 நாளிட்ட அறிக்கையையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி தெரிவித்து, பசுமைத் தீர்ப்பாணையத்தின் மேற்கண்ட ஆணைகளின் நகல்களையும் மேலும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து பெறப்பட்ட கடிதங்களின் நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

(6) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 2 (2) (a) (iv)–ன்படி, குற்றச்சாட்டு என்பது பொது பணியாளராக இருந்து செய்த செயல், உள்ளாட்சி அமைப்புகளின் நிதியம் அல்லது பிற சொத்துக்கு இழப்பு எதுவும் ஏற்படுவதற்கு வாய்ப்புகளாக அல்லது காரணிகளாக இருக்கிறது என்ற குற்றமுடையவராயிருக்கிறார் என்று உறுதி செய்யப்படிருப்பது என பொருள்படும் என இம்முறைமன்ற நடுவர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவது குறித்து மாண்பமை உச்சநீதிமன்றத்தால் பின்வரும், தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

“The issue of Solidwaste Management was earlier considered by the Hon’ble Supreme Court inter-alia vide judgments reported in (2000) 2 SCC 679 and (2004) 13 SCC 538 directing scientific disposal of waste by setting up of compost plants /processing plants, preventing water percolation through heaps of garbage, creating focused ‘solid waste management cells’ in all States and complying with the Municipal Solid Waste Management Rules, 2016 (SWM Rules, 2016) on urgent basis. It was observed that the local authorities constituted for providing services to the citizens are lethargic and insufficient in their functioning which is impermissible. Non-accountability has led to lack of effort on the part of the employees. Domestic garbage and sewage along with poor drainage system in an unplanned manner contribute heavily to the problem of solid waste. The number of slums have

multiplied significantly occupying large areas of public land. Promise of free land attracts more land grabbers. Instead of "slum clearance" there is "slum creation" in cities which is further aggravating the problem of domestic waste being strewn in the open. Accordingly, the Court directed that provisions pertaining to sanitation and public health be complied with, streets and public premises be cleaned daily, statutory authorities levy and recover charges from any person violating laws and ensure scientific disposal of waste, landfill sites be identified keeping in mind requirement of the city for next 20 years "Enforcement of the Rules and efforts to upgrade the technology relevant to the handling of solid municipal waste is a perennial challenge and would require constant efforts and monitoring with a view to making the municipal authorities concerned accountable, taking note of dereliction, if any, issuing suitable directions consistent with the said Rules and direction incidental to the purpose underlying the Rules such as upgradation of technology wherever possible. All these matters can, in our opinion, be best left to be handled by the National Green Tribunal established under the National Green Tribunal Act,2010. The Tribunal, it is common ground, is not only equipped with the necessary expertise to examine and deal with the environment related issues but is also competent to issue in appropriate cases directions considered necessary for enforcing the statutory provisions".

மேற்காணும் நிலையில், முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனைக்குப்பின் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மயிலாடுதுறையைச் சார்ந்த மனுதாரர் திரு.V.பழனிவேலு என்பவர் தனது 02.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளில் கழிவுநீர் கலந்து மாசுப்படுத்துதல் காரணமாக தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைப்படி விதிக்கப்பட்ட இழப்பீடு தொகையான ரூ 9 இலட்சத்தை நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் அரசின் ஒப்புதலின்றி முறைகேடாக நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து இதற்கு காரணமான உரிய அலுவலர்களிடமிருந்து மேற்காணும் தொகையினை வசூலித்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட வேண்டி இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

சுற்றுப்புறச் சூழல் பாதிக்கும் பொருட்டு மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளில் குப்பைகள் கொட்டப்பட்டதாலும், கழிவுநீர் கலக்கப்பட்டதாலும் மற்றும் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதன் மூலம் நீர்நிலைகளில் மாசு ஏற்பட்டது என திரு.எஸ்.விஜயகுமார் என்பவர் தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தொடர்ந்த வழக்குகளில் (வழக்கு O.A.No.92/2017 (SZ) மற்றும் O.A.No.23/2018 (SZ) வழங்கப்பட்ட ஆணையின்படி, நீர்நிலைகளில் மாசு ஏற்பட்டதற்கு மயிலாடுதுறை நகராட்சியானது மாசு இழப்பீட்டு தொகையாக ரூ 9 இலட்சம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தும்படி 23.12.2019 நாளிட்ட கடிதத்தின் மூலம் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தலைவர் அறிவுறுத்தி உள்ளதை ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது. மேற்காணும் இழப்பீட்டு தொகை நகராட்சியால் செலுத்தப்படாத நிலையில், திரு.விஜயகுமார் என்பவர் தொடுத்த மேற்காணும் வழக்கில் வழங்கப்பட்ட 17.11.2021 மற்றும் 03.02.2022 நாளிட்ட தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைக்கிணங்க, இழப்பீட்டுத் தொகையான ரூ 9 இலட்சம் செலுத்தப்பட வேண்டும் என நாகப்பட்டினத்தில் உள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தனது

23.03.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் மீண்டும் வலியுறுத்தியதன் பேரில் 08.04.2022 அன்று மயிலாடுதுறை நகராட்சி ஆணையரால் நகராட்சியின் பொது நிதியிலிருந்து இழப்பீட்டு தொகை ரூ 9 இலட்சம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது, இதற்கான பின்னேற்பு ஒப்புதல் 27.05.2022–ல் நடைபெற்ற நகராட்சியின் நகர்மன்ற தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான ஒப்புதல் / பின்னேற்பு ஒப்புதல் எதுவும் நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து இதுகாறும் பெறப்படவில்லை.

மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளில் கழிவுநீர் கலக்கப்பட்டும், குப்பைகளை கொட்டியும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்துள்ள நடவடிக்கைகளினால் நீர்நிலைகள் மாசு ஏற்பட்டதன் காரணமாக மாண்பமை தேசிய பசுமை தீர்ப்பாயத்தால் வழக்கு எண் O.A.No.606/2018–ல் வழங்கப்பட்ட நெறிமுறைகள் பின்பற்றப்படாததாலும் மற்றும் 2016 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள் நகராட்சியால் பின்பற்றப்படாததாலும் சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதன் காரணமாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணையின்படி தமிழ்நாடு மாசு காட்டுப்பாட்டு வாரியத்தால் 23.12.2019 நாளிட்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்ட மாசு இழப்பீட்டு தொகையான ரூ 9 இலட்சத்தினை காலந்தாழ்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதியின்றியும் நகராட்சி ஆணையரால் 08.04.2022 அன்று நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

நகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளில் கழிவுநீர் கலந்து மாசு ஏற்படும் போதே உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் நகராட்சியால் இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என இம்முறைமன்றம் கருதுகிறது. இது முழுக்க முழுக்க நகராட்சி அலுவலர்களின் அலட்சியத்தாலும், மெத்தன போக்கினாலும் உருவாகியுள்ளது. எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரோடு ஒருங்கிணைந்து, மேற்காணும் நீர்நிலைகளில் மாசு ஏற்பட்டவுடன் அதனை களைந்திடும் விதமாக செயல்படாத மயிலாடுதுறை நகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்களை கண்டறிந்து, இவ்வாறு நகராட்சிக்கு ரூ 9 இலட்சம் நிதியிழப்பு ஏற்பட காரணமானவர்களிடமிருந்து மேற்படி இழப்பீடு தொகையான ரூ 9 இலட்சம் வசூல் செய்யப்பட வேண்டும் எனவும் மற்றும் நிதியிழப்பிற்கு காரணமானவர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்ய முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் மயிலாடுதுறை நகராட்சியின் பொது நிதியிலிருந்து இழப்பீட்டு தொகையான ரூ 9 இலட்சம் செலுத்தப்பட்டது குறித்து (Special Audit) சிறப்பு உள்ளாட்சி நிதித்தணிக்கை ஒன்றினை மேற்கொண்டு அதன் அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், இம்முறைமன்றத்திற்கும் அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The DMA is directed to verify the following in the light of the petitioner's request to this Forum:-

1) Whether the Commissioner, Mayiladuthurai is competent and authorized to remit the Environmental Compensation as ordered by the NGT from the General Fund without the permission of DMA?

2) Whether the Municipal Commissioner has sent any proposal to DMA for ratification of the act of compensation remittance? If not, necessary

disciplinary action should be taken against the Commissioner and officials concerned by DMA.

3) Whether the field officials and Commissioner, Mayiladuthurai Municipality who were responsible for the contamination and inefficient effluent treatment as arrived at by the NGT have been identified and appropriate disciplinary action has been initiated? The other departments, like PWD may be identified and the higher authorities to be addressed for necessary action against the delinquent officials, if any, for failure of action.

4) Whether the Compensation amount has to be recovered from the delinquent field-officials responsible for the contamination and pollution as identified by the NGT.

A report may be sent to this Forum in this connection in the next 60 days.

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.V.பழனிவேலு,
48, திருமஞ்சனவீதி, கோரநாடு,
மயிலாடுதுறை – 609 001, மயிலாடுதுறை மாவட்டம்.

2) ஆணையாளர், மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை – 609 001, மயிலாடுதுறை மாவட்டம்.

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

23/2/23

செயலாளர்.

23/02/23